பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 02 சனிக்கிழமை (18-11-1995) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 347

## யாழ்ப்பாணத்தின் மீதான

# தாக்குதலை தடுத்து நிறுத்தக் கோரி

# புதுடில்லியில் ஆர்ப்பாட்டப் பேரணி

## கோபாலசாமி தலைமையில் நடந்தது

புதுடில்லி, நவம்பர் 18

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் நடத்தும் தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கு இந்திய மத்திய அரசு உதவ வேண்டும் — என்று கோரும் மிகப் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று புதுடில்லியில் நடத்தப்பட்டது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமி தலைமை வகித்து நடத்திய இப்பேரணியில் சுமார் ஐயாயிரம் பேர் பங்குபற்றினர்.

யாழ்ப்பாணத்தில் அரசு நடத்திவரும் போரில் தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் எனக் குற்றஞ்சாட்டி அதைத் தடுத்து நிறுத்த இந்தியா முயலவேண்டும் என்று கோரி மறுமலர்ச்சி தி. மு. க. தொண்டர்கள் நேற்று புதுடில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஈழத்தமிழர்கள் சிந்தும் இரத்தம் எமது சொந்த இரத்தம்.

அவகளின் கண்ணீரில் பங்கு கொள்ளுங்கள்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு வழங்குங்கள்.

இவ்வாறு உரத்த குரல் எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியாகச் சென்றனர்.

ம. தி. மு. கவின் பொதுச் செயலர் வை. கோபாலசாமி தலைமையில் சுமார் ஐயாயிரம் தொண்டர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பிரதமர் நரசிம்மராவுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் எதிரான கண்டன வாசகங்கள் அடங்கிய அட்டைகளைத் தாங்கியவாறு கோஷமிட்டவாறு தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு பிரதமர் நரசிம்மராவின் இல்லத்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கைதாகி விடுதலை

புதுடில்லி, நவ. 18

போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்களைக் காப்பாற்றுமாறு கோரி புதுடில்லியில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்மீட்பில் தம்மை இணைத்த தம்பதியர்

யாழ்ப்பாணம், நவ. 19

மண் மீட்புப் போரில் இளம் தம்பதியர் தம்மை இணைத்த சம்பவம் வடமராட்சியில்நேற்று நிகழ்ந்தது.

உடுப்பிட்டியைச் சேர்ந்தஇரத்தினம் (ரவி) (வயது 24) என்பவரும், அவரது மனைவி சத்தியதேவி (வயது 19) என்பவருமே விடுதலைப் புலிகளுடன் தம்மை இணைத்து கொண்டவர்கள் ஆவர்.

சாரதியான இரத்தினமும் சத்தியதேவியும் இரண்டரை மாதங்களுக்கு முன் திருமணம் செய்திருந்தனர்.

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் அவலங்களை நேரில் பார்த்து தமக்கும் இந்த அவலம் ஏற்படாமல் தடுக்க இயக்கத்தில் தாம் இணைந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

அவர்களுடன் இரத்தினத்தின் மருமகளும் நேற்று இயக்கத்தில் இணைந்து கொண்டார். [இ-3]

## வடமராட்சியில் நேற்றும் ஷெல் வீச்சு

### கோயில் வசந்த மண்டபம் சேதம்

கரணவாய், நவ. 18

பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிப் பகுதியை நோக்கி நேற்றுக்காலை ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த ஷெல்களில் ஒன்று வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலில் வீழ்ந்து வெடித்ததினால் அக் கோவிலின் வசந்தமண்டபம் பலத்த சேதமடைந்தது

இதில் ஒரு பெண் காலில் காயமடைந்து வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(இ-ரி)

## தமிழர் படுகொலையை நிறுத்தி பேச்சு மூலம் உடன் தீர்வு காண்க

### உலகத் தமிழர் பேரவை கோரிக்கை

மணிலா, நவ. 18

யாழ்ப்பாணத்தில் அப்பாவித் தமிழர்கள் மீது குண்டு வீசி அவர்களைப் படுகொலை செய்வதை நிறுத்தி உடனடியாகப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண அரசு முன்வர வேண்டும். இதற்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா. ஜனார்தனம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் தமிழருக்கு எதிராக நடந்து வரும் போர் உலகத் தமிழருக்கு மிகுந்த வேதனையையும் துன்பத்தையும் அளிக்கிறது.

போர் நிறுத்தம் உடனடியாக ஏற்பட வேண்டும். அதற்கு ஜனாதிபதி சந்திரிகா மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளார்.

ஆயுதங்களை புலிகள் கீழே போட வேண்டும் என்பதைத் தவிர மற்ற நிபந்தனைகள் ஏற்கக்கூடியவை.

பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே சம்மதம் தெரிவித்திருந்த பின்னும் அரசு அவர்களின் கருத்தை அறிய முற்படாதது சிங்கள இராணுவத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமத்தில் நேற்று சிறு மோதல் சம்பவங்களே

யாழ்ப்பாணம், நவ. 18

பெரும் போர் களமாக மாறியுள்ள வலிகாமம் பகுதியில் நேற்று பெரும்பாலும் அமைதி நிலவியது.

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நேற்று சிறு மோதல் சம்பவங்கள் மாத்திரமே இடம்பெற்றன.

யாழ். நகரைக் கைப்பற்றி விடுவதற்கான இறுதிக் தாக்குதலுக்குப் படையினர் தயாராகி வருவதாகவும் —

ஏற்கனவே கைப்பற்றப்பட்ட இடங்களில் தமது நிலைகளைப் பலப்படுத்துவதில் படையினர் ஈடுபட்டிருப்பதாகவும் இலங்கை வானொலி தெரிவித்தது. (ஐ)

## சிங்கள இனவாதிகள் அச்சுறுத்தலால் முஸ்லிம்கள் கூட்டமும் கைவிடப்பட்டது

கொழும்பு, நவ. 18

கொழும்பு புதுக்கடையில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி நேற்று நடத்தவிருந்த கூட்டம் சிங்கள இனவாத கும்பலின் அச்சுறுத்தல் காரணமாக கைவிடப்பட்டது.

யுத்தத்தை நிறுத்தி இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்க்குமாறு அரசிடம் வலியுறுத்துவதற்காகவே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முஸ்லிம் மக்களுக்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு வழங்கிய உறுதிமொழிகள் இதுவரை நிறைவேற்றப்படாததைக் கண்டிக்கும் தீர்மானம் இக்கூட்டத்தில் எடுக்கப்படவிருந்தது.

யுத்தத்துக்கு எதிரான போக்குடைய கட்சிகளும், அமைப்புக்கள் சிலவும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தன என்றும் —

அரசாங்கத்தின் உதவியுடனேயே குண்டர்கள் கும்பல் ஒன்று அச்சுறுத்தல் விடுத்து கூட்டம் நடைபெறுவதைத் தடுத்துள்ளது என்றும் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### செய்தியாளர் மீது சோதனை

மணிலா, நவ. 18

செய்தி சேகரிக்கச் சென்ற இந்தியப் பத்திரிகையாளர் மூவர் மீது பொலிஸார் சோதனை நடத்தியுள்ளனர்.

இந்தியா டுடே மற்றும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோருக்கு உதவ புதிய நடைமுறை

### யாழ். செயலகம் வகுத்தது

யாழ்ப்பாணம், நவ. 18

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான உதவிகள் இலகுவாகக் கிடைக்க புதிய நடைமுறை ஒன்றை யாழ். செயலகம் வகுத்துள்ளது.

யாழ். அரச அதிபராகப் பதவியேற்று நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய திரு. செ. பத்மநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்த நடைமுறை பற்றி தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட பிரதேச செயலர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் புதிய நடைமுறையை அமுல் செய்வதற்கான குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இதன்படி சாவகச்சேரி பிர

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

பெற்றுக் கொள்ளவும்

உங்கள் கலர் படங்களை பெற்றுக் கொள்ளவும். பேபி போட்டோ, திரு. T. நாகலிங்கம் (விதானையார் வளவு) ஓட்டுவெளி, ஆசைப்பிள்ளை ஏற்றம், மிருசுவில்.

(39201)

# குமணவில் தபால்பொதிகள் ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், நவ. 19

அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் 'குமண' கப்பலில் ஆயிரம் தபால் பொதிகள் எடுத்து வரப்பட விருக்கின்றன.

கடந்த ஆறு மாத காலமாக கொழும்பில் தேங்கிக் கிடந்த தபால் பொதிகளில் ஒரு கொகுதியான இந்த தபால் பொதிகள் படையினரின் சோதனை முடிந்ததால் எடுத்து வரப்பட விருக்கின்றன.

ஒரு தொகுதி அடையாள அட்டைகள், இம் மாதத்துக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் உட்பட மற்றும் பல.பொருள்கள் இக்கப்பலில் எடுத்துவரப்படவிருக்கின்றன.

இக்கப்பலில் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி, ஆயிரத்து 750 மெற்றிக் தொன் மா ஆகியனவும் எடுத்து வரப்படும்.

நேற்று வடக்கு நோக்கிப் புறப்பட்ட இக்கப்பல் திருகோணமலையில் தரித்து நிற்கும் என்றும் —

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்து 'மாஹோ' புறப்பட்டதும் இக்கப்பல் பருத்தித்துறைக்கு வரும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## யாழ். நிலைமை குறித்து ஹரிகுணதிலக்க

கொழும்பு, நவ. 18

வெறுமையாக இருக்கும் யாழ்ப்பாண நகரினுள் படையினர் பிரவேசிப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தில் அரசின் பிரசன்னத்தைக் காட்ட முடியாது.

விமானப்படையின் முன்னாள் தளபதி எயர் மார்ஷல் ஹரி குணதிலக்கா பி.பி.ஸி· தென்னாசிய சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் என்பது தமிழர்களின் பாரம்பரிய பூமி. அவர்களின் மையப் பகுதி. அங்கு படையினர் பிரவேசிக்கும் போது கைதட்டி வரவேற்க எவருமே இருக்கப் போவதில்லை என்றும் ஹரி குணதிலக்கா தெரிவித்தார். (இ)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆஸி. உதவி

கொழும்பு, நா. 18

வடபகுதியில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவுவதற்காக ஆஸ்திரேலிய அரசு ஒரு கோடி 92 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவிடம் வழங்கியுள்ளது.

ஆஸ்திரேலிய அபிவிருத்தி ஒத்துழைப்புத்துறை அமைச்சர் ஹொரன் பில்னே இத்தகவலை அறிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா வழங்கும் இந்த நிதி உதவி இடம் பெயர்ந்த மக்களுக்கு மருத்துவ சுகாதார வசதிகளை வழங்கவும் அவர்களது போக்குவரத்து செலவீனங்களுக்கும் பயன்படுத்தப்படும் என்று கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகக் நேற்று விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## தற்காலிக காவல் நிலையங்கள்

தென்மராட்சி, நவ. 18

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிக்கு வந்துள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் 3 காவல் நிலையங்கள் தற்காலிகமாக இயங்க ஆரம்பித்துள்ளன.

கைதடி, கொடிகாமம், கிளாலி ஆகிய இடங்களில் இந்த நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை வலிகாமத்தில் இயங்கிய காவல் நிலையங்களை மீள தென்மராட்சியில் [illegible] வருவதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3-117)

## இடம் மாற்றம்

### ஜெயா அழகு மாடம்

எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எதிர்வரும் திங்கட்கிழமை 20.11.95 தொடக்கம் பிரதான வீதி, சாவகச்சேரி (பழைய கோட் முன்பாக) இயங்கும் என்பதனை அறியத் தருகின்றோம்.

—நிர்வாகி
ஜெயா அழகு மாடம்

(39226)

## K. K. S.
### வைத்திய ஆலோசனை நிலையம்

யாழ் போதனா வைத்தியசாலையின் பிரபல வைத்திய நிபுணர்களால் கீழ்க்காணும் வைத்திய ஆலோசனை கிளினிக்குகள் 20- 11- 95 முதல் ஆரம்பிக்கப்பட உள்ளன ஏன்பதை மகிழ்ச்சியுடன் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

1. மெடிக்கல் (மருத்துவம்) கிளினிக்
2. கண் சிகிச்சை ,,
3. தோல் சிகிச்சை ,,
4. பற் சிகிச்சை ,,
5. காது, மூக்கு. தொண்டை (E. N. T.) கிளினிக்
6. மகப்பேற்று கிளினிக்

★ ஆய்வு கூட வசதிகள் உள்ளன.

குறிப்பு:

பார்வையிடும் இடம் - மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இருந்து வல்லிபுர கோயில் வீதியில் 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

(39224)

## உடன் சந்திக்கவும்

வட்டுக்கோட்டை மாவடியை சேர்ந்த
உருத்திரனை
அவரது உறவினர் சறோ அவசரமாக தேடுகிறார்.
கீழ்காணும் விலாசத்தில் சந்திக்கவும்.

திருமதி திருப்பதியம்மா
C/o குறிஞ்சி புடைவை அகம்
நவீன சந்தை,
சாவகச்சேரி.

(39227)

## இரண்டாம் ஆண்டு நிறைவு நாள்
## நினைவஞ்சலி

அமரர்
### இரத்தினவதி வேலுப்பிள்ளை

சிரார்த்த திதி:- கார்த்திகை அபரபக்க ஏகாதசி
சிரார்த்த நாள்:- 18-11-1995 சனிக்கிழமை

ஆறாத் துயர்க் கடலில்
அனைவேமும் மூழ்க விட்டு
மாறான விதி வசத்தால்
மறைந்தவுமை மறவமம்மா!
இலலத்து ஒளி விளக்காய்
இருந்த வெங்கள் பொற்கொடியே
வல்லரசு எறிகணைக்காய்
மறைந்த துயர் மறப்பதுமோ!

அன்னாரின் சிரார்த்த வைபவத்திற் கலந்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்குமாறு உற்றார், உறவினர் அன்பர்களை அன்பாக அழைக்கின்றோம்

வேலகம்,
குருக்கட்டு,
கரணவாய்,
கரவெட்டி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(39213)

## ஹட்டன் நஷனல் வங்கி
### ஊழியர்களுக்கு

ஹட்டன் நஷனல் வங்கி யாழ். கிளை ஊழியர்களை இன்று காலை 9.00 மணிக்கு பருத்தித்துறையில் உள்ள வங்கியின் புதிய கட்டடத்துக்கு சமுகம் தருமாறு வேண்டுகிறேன்.

முகாமையாளர்,
ஹட்டன் நஷனல் வங்கி,
யாழ்ப்பாணக் கிளை

(சி/2549)

## "இரட்சிப்பின் சத்தம் சபை"
### முக்கிய அறிவித்தல்

எமது சகல ஊழியங்களும் தற்போது சாவகச்சேரி கச்சாய் றோட் உதயசூரியன் வீதியில் நடைபெறுகின்றன என்பதை அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு
போதகர் S. M. ஸ்ரீபன்

(39228)

## அறிவித்தல்

எமது சேவையினூடாக நோயாளர்களையும், வயோதிபர்களையும் சொழும்பிற்கு கூட்டிச் செல்வதற்கு ஏற்கனவே எம்மிடம் பதிவு செய்து கொண்டவர்களும், ஏனைய அவசர நோயாளர்களும் எமது புதிய முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

### "தர்மிசா ரவல்ஸ்"

விமானத் தொடர் அம்புலன்ஸ் சேவை
வதனா மருந்தகம்,
மீன் சந்தை ஒழுங்கை, பஸ் நிலையம்,
சாவகச்சேரி.

(38203)

## தேடுகிறார்

காரைநகர் நடுத்தெருவைச் சேர்ந்தவரும் தற்பொழுது இடம் பெயர்ந்து பருத்தித்துறை தும்பளை வீதி சாதக்கடவையிலுள்ள திருமதி ஜெ. தங்கவேலாயுதம் என்பவரின் வீட்டில் வசிப்பவருமாகிய சு. இரத்தினசபாபதி ஆகிய நான், காரைநகரைச் சேர்ந்தவரும் ஓட்டுமடத்தில் எனது சகோதரர் சு. சண்முகத்தோடு இருந்தவருமாகிய திருமதி மீனாட்சி அரியரத்தினம் (சுபத்திரை) என்பவரை என்னோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(39222)

## சியோன் தேவாலயம்
### விசுவாசிகளுக்கு அறிவித்தல்

எமது சபையின் ஞாயிறு ஆராதனை காலை 9-00 மணிக்கு கீழ்வரும் முகவரியில் நடைபெறும்.

சபையின் தலைமைப் போதகர்
J. K. பிலிப் அவர்களையும்
இதே முகவரியில் சந்திக்கலாம். இதுவரை சந்திக்காத விசுவாசிகள் உடனடியாக வந்து சந்தியுங்கள்.

சியோன் தேவாலயம்
மதுவன் வீதி,
மீசாலை வடக்கு,
மீசாலை.

(39223)

## நங்கூரம்
### சமூக அறிவியல் ஏடு

இடம்பெயர்ந்துள்ள சந்தாதாரர்களும், பணியாளர்களும், வாசகர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய புதிய முகவரி:-

நிர்வாக ஆசிரியர்
நங்கூரம்
குருந்தட்டி, மகாத்மா வீதி,
நெல்லியடி, கரவெட்டி,
யாழ்ப்பாணம்.

(39225)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சந்திரிகாவின் முயற்சி!

யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றுவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது சூரியப் பிரகாசம் (சன்ஷைன்) இராணுவ நடவடிக்கை. அது தொடங்கப்பட்டு ஒரு மாதம் முடிவடைந்து விட்டது.

யாழ்ப்பாண மாநகரின் எல்லைப்புறத்தைத் துருப்புக்கள் நெருங்கி விட்டதாகவும், நகரத்தை இரண்டொரு நாள்களில் பிடித்து விடப் போவதாகவும் அரச படை அதிகாரிகள் கொக்கரித்தார்கள்.

ஆனால் இப்போது, அவர்கள் அமுக்கி வாசிக்கத் தொடங்கியுள்ளார்கள். கைப்பற்றிய இடங்களைப் பலப்படுத்துவதிலும், நிலைகொள்வதிலும் துருப்புக்கள் ஈடுபட்டிருப்பதாகவும், நகருக்கு வருவதற்கு இன்னும் பத்து நாள்களுக்கு கூடுதலாக எடுக்கலாம் என்றும் பின்னடிக்கிறார்கள்.

நகரின் எல்லைப்புறத்தே வைத்துப் படையினருக்கு எதிராக வியூகம் அமைத்து விடுதலைப் புலிகள் சமரைத் தீவிரமாக்கி உள்ளனர்.

அதனால் ஏற்படவுள்ள இராணுவ இழப்புகளைத் தவிர்ப்பதற்காக தமது தாக்குதல்களைத் (offensive) தற்காலிகமாக நிறுத்தி, தங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் (Defensive) இறங்கியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் புதிய தாக்குதல்களுக்கு அஞ்சி எடுக்கும் நடவடிக்கைக்கு நிலைகொள்ளுதல், பாதுகாப்பைப் பலப்படுத்துதல் என்று கவர்ச்சிகரமாகப் பெயரிட்டுச் சிங்கள மக்களை இராணுவ அதிகாரிகளும் அரசாங்கத்தினரும் ஏமாற்றுகின்றனர்.

யாழ். நகரத்தைக் கைப்பற்றுவது சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வருவது, விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவது என்ற அரசின் திட்டம் மூலோபாய ரீதியாக முழுத்தோல்வி கண்டு விட்டது.

வலிகாமத்தில் வாழ்ந்த ஐந்து இலட்சத்துக்கும் அதிக மக்கள் இப்போது அங்கில்லை: இடம்பெயர்ந்து விட்டார்கள். அரசு யாரை ஆளப் போகிறது? யாருக்குச் சிவில் நிர்வாகம் நடக்கப்போகிறது?

அரசியல் ரீதியான இந்த மாபெரும் தோல்விக்குப் பின்னரும் யாழ், நகரை கைப்பற்றுவது என்பது அர்த்தமற்றது. தோல்வியை மறைக்க காட்டப்படும் வீம்புத்தனம். அது விருதுக்கு வேட்டையாடும் முட்டாள் தனம்.

மக்கள் இல்லாத ஒரு பிரதேசத்தைப் பிடிப்பதற்கு சந்திரிகா கங்கணம் கட்டி நிற்பது யாழ்ப்பாணத்தை இடித்துக் கொட்டி, மயானமாக்கி காடாக்கி விடுவதற்காகவே? ஜே. ஆர். அரசின் காலத்தில் யாழ்ப்பாண நூலகம் தான் எரிக்கப்பட்டது. ஆனால் சந்திரிகாவோ யாழ்ப்பாண நகரின் வடிவத்தையே எரித்து இலங்கைப் படத்திலிருந்து அதனை அழிக்க முனைந்துள்ளார்.

சமாதானம் காணப்போவதாக தமிழர்களின் வாக்குகளை வாங்கிக் கொண்டு பதவிக்கு வந்தவர் சந்திரிகா. ஆனால் தம்மைப் போன்ற தமிழர் விரோதியை இலங்கை அரசியல் வரலாறுஇது வரை கண்டதில்லை என்று ஒரு 'சாதனை' படைக்க முயல்கிறார் இப்போது. அடுத்த தடவை தனிச் சிங்கள வாக்குடன் ஆட்சி பீடம் ஏறலாம் என்ற கற்பனையுடன்; கனவுடன்.

நினைப்பதெல்லாம் நடப்பதில்லை என்பதனை அவர் எப்போது உணரப் போகிறார்...?

## வெகுஜன ஒன்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்ற செயலத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# இறுதித் தாக்குதலின் போது நகரின் சொத்துக்களுக்கு பேரழிவு ஏற்படும்

### செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி கவலை தெரிவிப்பு

ஜெனிவா, நவ. 18

யாழ். நகரம் மீதான படையினரின் இறுதித் தாக்குதலின் போது நகரின் சொத்துக்கள் உடைமைகளுக்கு பேரழிவு ஏற்படலாம்.

செஞ்சிலுவைச சங்க சர்வதேசக் குழுவின் இலங்கைப் பிரதிநிதி மார்க்கோ அல்த்தர் ஜெனிவாவில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முக்கியமாக நகரில் உள்ள ஆயிரம் படுக்கைகளைக் கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை குறித்தே தாம் கவலைப்படுவதாக அவர்மேலும் தெரிவித்தார்.

குடிமக்கள் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பெரிதாகக் கவலைப்படவில்லை ஏனெனில் இறுதி யுத்தம் ஆரம்பமாகும்போது யாழ் நகரில் மக்கள் எவருமே தங்கியிருக்க வாய்ப்பு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் நாங்கள் நீண்டகாலம் எதிர்பார்த்தது ஒன்று தான். நகரம் சன நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடந்தாலும் பெரும் யுத்தம் ஒன்று நடைபெற்றே ஆகும்.

யாழ்ப்பாணம் நிலைமை யூகோஸ்லாவியா நிலைமை போன்று மோசமடையவில்லை. பருத்தித்துறைக்கு உணவுக் கப்பல்களை தொடர்ந்து கொண்டு வர முடியும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நம்புகிறது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# உணவு பொருள் எடுத்துவர இருந்த இழுபறி நீங்கும்?

யாழ்ப்பாணம், நவ. 18

வடபகுதிக்கு தரை மார்க்கமாக உணவுப் பொருள்களைர் எடுத்து வருவதில் இருந்த இழுபறி நிலையை நீக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக அரசாங்கத்துக்கும் கூட்டுறவுத்துறை வட்டாரங்களுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டிருப்பதாக அறிய வருகிறது

வட பகுதியில் இருந்து வரும் லொறிகள் வவுனியா நகருக்குள் நுழையக் கூடாது என்றும் —

கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் பொருள்களை நொச்சிமோட்டை பாலத்துக்கு அருகில் வைத்து மாற்றி எடுத்து வர வேண்டும் என்றும் — இராணுவத்தினர் கெடுபிடிகளை நடத்தி வந்தனர்.

வட பகுதியில் இருந்து செல்லும் லொறிகள் வவுனியா நகருக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் இருந்த வேலைகளைச் செய்வது, எரிபொருள் நிரப்புவத போன்ற பிரச்சினைகளை லொறி உரிமையாளர்கள் எதிர் நோக்கி இருந்தனர்.

இதன் காரணமாகவே கொழும்பில் இருந்து தரை மார்க்கமாக வடக்கே பொருள்களை எடுத்து வருவதில் கடந்த காலங்களில் தடங்கல் நிலை இருந்து வந்தது. (இ-9)

## இடப்பெயர்ந்த உறுப்பினருக்கு முற்பணம்

தென்மராட்சி, நவ. 18

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் தங்கியுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு முற்பணமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

அவர்களுக்கு சென்மதி நிலுவையாக உள்ள பணத்தையும் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடபிராந்திய கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் (ப' தெ) இ. சபாரத்தினம் இடம்பெயர்ந்துள்ள சங்கங்களுக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளார்.

(இ-117)

## இமையாணனில் போர்ப் பிரகடன பிரசாரம்

யாழ்ப்பாணம், நவ. 18

வடமராட்சி மேற்கு இமையாணன் கிராமப் பகுதியில் போர்ப் பிரகடனத்தையொட்டிய பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரவெட்டி கல்விக் கோட்டத்தைச்சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரினால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பிரசாரம், உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி அதிபர் திரு. ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

ஓடி வாருங்கோ!
ஓடி வாருங்கோ!!
சங்கத் தமிழினமே
தன்மானமுள்ளவரே
ஓடி வாருங்கோ!!!

போன்ற எழுச்சிக்கோஷங்கள் அங்கு ஒலித்தன.

இப்படியான போர்ப்பிரசாரக் கூட்டங்கள் வடமராட்சிக் கிராமங்கள் தோறும் தொடர்ந்து நடைபெற உள்ளன. (இ-90)

## சாவுக்கு அஞ்சிப் பேசாதிருந்தால் சந்ததி பழிக்கும்!

என் வீட்டு மாமரம் இந்நேரம்
காய்முற்றிக் காம்பு கழற்றும்.
வரும்போது பொத்தி தள்ளியிருந்த
கிணற்றடி வாழை
பூஞ்சிப்பு வரை குலையீன்றிருக்கும்.
அடிவளவுச் செவ்விளநீர்க் கன்று
கர்ப்பம் தரித்திருக்கும்.
அவிழ்த்துவிட்டு வந்த பசுமாடு
கஞ்சித் தண்ணீருக்காகக் காத்திருக்கும்.
சுவாமியறை அம்மன் படம்
பூவுக்கும்;
வெள்ளிக்கிழமை விளக்குக்கும் ஏங்கும்.
திண்ணையில் ஏற்றிவிட்டு வந்த சைக்கிள்
என்பாரமேறாது பரிதவிக்கும்.
இழுத்தடிப்பாரின்றி ''ஆசிமடப் பிள்ளையார்'' மணி
துருப்பிடிக்கத் தொடங்கும்.
'திருநெல்வேலிச் சந்தை' செத்துக் கிடக்கும்.
பார்த்தலுக்காத ''நல்லூர் வீதியில்''
யாரிருப்பார் இந்நேரம்?
சிரித்தபடி திரியும் அந்த விசர் பிடித்த இளைஞனை
யார் அழைத்து வந்திருப்பார்?
கோண்டாவில்... தோட்ட வெளிகளில்
காய்த்துக் கிடந்த கத்தரிக் காய்களை
யார் பிடுங்குவர்?
எப்போதும் கல கலத்துக் கிடக்கும் 'பலாலி வீதி'
இப்போது எப்படி இருக்கும்?
என் வீட்டு வெளிக்கதவு
திறந்து உள்ளே போக ஒருவரின்றி
உறவிழந்து கிடக்கும்.
தினசரி என்னை உயிர்ப்பிக்கும் 'இராஜ வீதி'
அடித்துப் போட்ட கருநாகமாக
அனாதையாகக் கிடக்கும்.
எல்லாமிழந்து
நானிங்கு ஒரு மரத்தின் கீழே இருக்கின்றேன்.
என்னுடன் ஐந்து லட்சமான என் சுற்றம்.
இது விதியல்ல... சதி.
பார்க்குமிடமெல்லாம் பரவிக்கிடக்கின்ற
என் இளைய தலைமுறையே! எழுக.
இது எங்கள் பூமி.
அன்னை மண்ணிருந்து அடிவேர் பிடுங்கி
எம்மை வீதியில் வீசியவன் எவன்?
அவனை அழித்து விடுவோம்.
தாயின் மடியேறிவரும் ''கிங்காருக்கு'' எதிராகப்
போர் செய்யப் புறப்படுவோம்.
எம்மை எறும்பாய் நினைத்து வரும் பகைவனுக்கு
நாங்கள் வேங்கைகள் என்றுணர்த்துவோம்.
நானும் வருகிறேன் உம்மோடு;
நடவுங்கள்.
சாவுக்கஞ்சிப் பேசாதிருந்தால் சந்ததி பழிக்கும்.
கார்த்திகை விளக்கீட்டுக்கு
வீட்டுவாசலில் விளக்கேற்றும்
பொசிப்பிழந்து போனோம்.
திருவெம்பாவைக்குப் பள்ளியெழுச்சி பாடவேனும்
எம்மூரின் கோயில்புக வரமருள்.
இளைய குருதி பாயும் என் விழுதுகளே!
எழுக!
பத்தாயிரம் பேர் வாருங்கள்.
நாளைக் காலை நம் வீட்டில்
நாங்கள் போயிருந்து மகிழலாம்.
நம்புங்கள்!
எல்லாம் உம்கையில்...

— புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையாபிள்ளை பாலசிங்கம்

(காரைநகர்)

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு கொக்குவிலில் வசித்தவரும், அப்புத்தளை வர்த்தகருமாகிய கந்தையாபிள்ளை பாலசிங்கம் அவர்கள் அமரராகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாபிள்ளை - நல்லபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், திலகவதி, சிவசுப்பிரமணியம் (சிவா ஸ்ரீ கண்ணன் அன் கோ, திருநெல்வேலி), சிவனேஸ்வரி, சிவஞானம், சிவகௌரி, சிவமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ந. சிறீஸ்கந்தராசா (நியூ ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி), சி. ஜெகநாதன் (நவலட்சுமி றேடர்ஸ், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பகீரதன், யசோதரா, யுகீர்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நெல்லியடி ம.ம.வி. வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் ஆலங்கோட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்;
K.B. சிவா
(மகன்)

நெல்லியடி ம.ம.வி. வீதி,
நெல்லியடி.

(39229)

## பிறின்ஸ் எதிர்மனசிங்கி

(இளைப்பாறிய விதானையார்)

யாழ். நகர் பிரதான வீதியைச் சேர்ந்த பிறின்ஸ் எதிர்மனசிங்கி சென்ற 15.11.95 இல் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி நான்சியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் மரணச் சடங்கு 16 11.95 இல் யாழ். நகரில் நடைபெற்றது.

தகவல்:
திருமதி. புஸ்பா செல்வநாயகம்
(மகள்)

(39221)

## திருமதி ஐயாத்துரை முத்தம்மா

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி ஐயாத்துரை முத்தம்மா அவர்கள் 16 - 11 - 1995 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் அமரர் ஐயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும், பகவதி, கனகம்மா, மகேஸ்வரி, கமலா, சுப்பிரமணியம் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குழந்தைவேலு, செல்வரட்ணம் (பயில்வான்), தங்கவேலு (துரைச்சாமி), வைத்திலிங்கம் (கொழும்பு), தெய்வநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும், தங்கம்மா, அமரர் சிவனடி, மாணிக்கவாசகர், கணவதிப்பிள்ளை, நடராசா, பவளக்கொடி ஆகியோரின் சகோதரியும், யோகநாதன், இராசமலர், அரியமலர், இந்துமலர், உதயகுமார், ஜெயகுமார், அனுரா, மயூரதன், மீரா, பவானந்தி, சந்திரா, குமுதினி, மகேஸ்வரன், இந்திரா, விமலன், சியாமளா, மஞ்சுளா, சுஜீதா, சுமீதா, சுஜீகரன், சுகனியா, சுசீலா ஆகியோரின் பேர்த்தியும், ரதன், சியாந்தன், சுதன், கோகிலா, தாரகா, அமலன், தாரங்கா, பிரதீபன், தரன்ஜா ஆகியோரின் பூட்டியுமாவார்.

இவரது இறுதிக் கிரியைகள் 16 - 11 - 1995 வியாழக்கிழமை கரணவாய், காவில் வயலில் அமைந்துள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
சி செல்வரட்ணம் (பயில்வான்)
(மருமகன்)

வண்ணார்பண்ணை,

(39220)

## சவரிமுத்து ஜேம்ஸ்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து ஜேம்ஸ் 16 - 11 - 95 இல் காலமாகிவிட்டார்.

இவர் கிறிஸ்ரினாவின் அன்புக் கணவரும், உத்திரா, செல்வேந்திரா ஆகியோரின் பாசமிகுதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (18 -11-95) காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக மிருசுவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
J. உத்திரா
(மகன்)

செல்வ யஹால்,
மிருசுவில்.

(39214)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 18-11-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அரசு நடத்திவரும் யுத்தத்தால் தெற்கில் இனவாதம் வளர்கிறது

## முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி தலைவர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 18

தற்போது அரசு நடத்திவரும் யுத்தம் தெற்கில் மீண்டும் இனவாதத்தை வளர்த்துவிட்டிருக்கிறது.

— முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் அப்துல் மன்சூர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஏற்பாடு செய்திருந்த கூட்டம் குண்டர்கள் கும்பலால் குழப்பப்பட்டது குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசாங்கம் வெறுமனே யுத்த ரீதியாகச் சிந்தித்துச் செயற்படுவதால் அரசு முன்வைத்த தீர்வுத்திட்டம் கூட இன்று பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இந்தத் தீர்வுத் திட்டத்தைப் பற்றி எவருமே பேசிக்கொள்ளாத அளவுக்கு தெற்கில் இப்போது இனவாதம் மீண்டும் தழைத்துள்ளது.

தமிழர்களுக்கு எதுவுமே வழங்கக்கூடாது. அவர்களை அழித்துவிட வேண்டும் எனச் சிந்திக்கிற அளவுக்கு இந்த யுத்தம் சிங்கள மக்களின் மன உணர்வுகளை மாற்றியுள்ளது — என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-6)

## நிதித்துறை அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள கீழ்க்காணும் விலாசதாரரை இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு அடையாள ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

சின்னத்தம்பி சின்னராசா - புண்ணியர் மடம், நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம்.

## ஆசிரியர் சங்க உறுப்பினருக்கு

இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் தாய்ச் சங்க, மாவட்ட சங்கங்கள், கிளைச் சங்கங்களின் சகல நிர்வாகிகளுக்குமான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 30 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்ற மண்டபத்தில் நடைபெறும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

### கைது ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணியில் கலந்து கொண்ட மறுமலர்ச்சி தி.மு.க பொதுச் செயலாளர் வை. கோபாலசாமியும் சுமார் ஆயிரம் தொண்டர்களும் இந்தியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (அ-ஐ)

### இடம் பெயர்ந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேச செயலர் பிரிவு ஐந்து கோட்டங்களாகப் பிரிக்கப்படும்.

ஒவ்வொரு கோட்டத்துக்கும் இடம்பெயர்ந்துள்ள பிரதேச செயலர்கள் நியமிக்கப்படுவர்.

அவர்கள் பிரதேச செயலர் அலுவலகத்தில் அல்லது வேறு இடத்தில் இருந்து பணிபுரிவர்.

இடம்பெயர்ந்துள்ள கிராம சேவையாளர்களும் ஒவ்வொரு கோட்டத்திலும் செயற்படுவர்.

இவர்கள் இடம்பெயர்ந்த மக்களின் இருப்பிடவசதி, உணவு, சுகாதாரம், நோய் தடுப்பு போன்றவற்றுக்குப் பொறுப்பாக இருப்பர்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான உதவிகளை இலகுவாக்கவும், தேவைகளை உடனுக்குடன் நிவர்த்திக்கவும் இந்தப் புதிய நடைமுறை அமுல் செய்யப்படுகிறது.

## தாக்குதலை தடுத்து..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கிச் சென்றனர்.

### பொலீஸார் தடுத்தனர்

இந்திய நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வீதியில் வைத்து ஆர்ப்பாட்டக்காரர்களை பொலீஸார் தடுத்து நிறுத்தினர்.

அதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியில் அமர்ந்து மறியல் செய்தனர் இந்த மறியல் போராட்டத்தில் சென்னையில் இருந்து சென்ற 300 பெண்களும் கலந்து கொண்டனர்.

மறியல் போராட்டத்தால் அந்த வீதியில் போக்குவரத்து தடைப்பட்டது.

### வற்புறுத்த வேண்டும்

மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் மத்தியில் ம. தி. மு க பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி உரையாற்றினார்.

இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி யாழ். நகரில் இருந்து தப்பி ஓடும் ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்ற யாழ். பகுதியில் ராணுவ நடவடிக்கையை தடுத்து நிறுத்த இலங்கை அரசை மத்திய அரசு உடனடியாக வற்புறுத்த வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுகின்றனர் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும், இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவும் கூட்டாகச் செய்யும் சதியே அதற்குக் காரணமாகும்—

இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்—

இது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை கேட்டுக்கொள்கிறோம் — என்று கோபாலசாமி தனது உரையில் வற்புறுத்தினார். (அ-இ-ஐ)

### தமிழர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையின் போக்கில் ஜனாதிபதி செயற்பட்டு வருவதையே காட்டுகிறது. இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இது சரியான அணுகுமுறை அல்ல.

அப்பாவிச் சிங்களவர்கள் தாக்கப்பட்டது — அதை யார் செய்திருந்தாலும் — தவறான செயலே.

எனினும் அதற்காக சிங்கள மக்களுக்கு ஆயுதம் வழங்குவோம் என்று இராணுவத் தளபதி கூறுவது சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் உள்ள தமிழர்களுக்கு மிகுந்த அச்சத்தைத் தரும் செயலாகும் — என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

### செய்தியாளர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'மற்றாஸ் ஹேரால்ட்' பத்திரிகைகளைச் சேர்ந்த இவர்கள் தங்கியிருந்த தாஜ் சமுத்திரா ஹோட்டல் அறையும் சோதனையிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பொலீஸாரின் இச் செயலைக் கண்டித்து மறுமலர்ச்சி தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (ஐ)

### சிங்கள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்துள்ள லட்சக்கணக்கான மக்களின் நிலைமை தொடர்பாக பெந்தோட்டையில் நடைபெறவிருந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டம் இதேபோன்று சிங்கள இனவாதக் கும்பலின் [illegible] (ஐ-6)

## மரண அறிவித்தல்

### செல்வரெட்னம் இந்திராணி

அரியாலையைச் சேர்ந்த செல்வரெட்னம் இந்திராணி காலமானார். இவர் செல்வரெட்னத்தின் அன்பு மனைவியும், சூரி என அழைக்கப்படும் ஜெகதீசனின் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பி. ப. 4 மணிக்கு கிளாலி நருவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
எம். சூரி (சகோதரன்)
மு. கோபாலகிருஷ்ணன்,
ஐயனார் கோவிலடி,
தர்மலிங்கம் வீதி,
கிளாலி. (39230)

**உதயன்**
**கிளை நிலையம்**
**சாவகச்சேரி**

வாசகர்கள், விளம்பரதாரர்கள் செய்தியாளர்களின் வசதி கருதி

**உதயன் கிளை நிலையம்**

சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடி முன்பக்கத்தில் 9 ஆம் இலக்கத்தில்

இன்று சனிக்கிழமை பி. ப- 3 மணிக்கு திறந்து வைக்கப்படுகிறது.

★ செய்தி, விளம்பரம் சேகரிப்பு, பத்திரிகை விநியோகம் ஆகிய பணிகள் இங்கு நடைபெறும்.

★ அதிகாலை தொடக்கம் இரவு 8 மணிவரை சேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org